1990 ஏப்ரல் 26]

திரு. வி. கே. சின்னசாமி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தடப்பள்ளி அரக்கன்கோட்டை வாய்க்கால் செய்யப்பட்டிருக்கிறது இன்றைக்கு. ஆனால் கிளை வாய்க்கால்கள் 2 வாய்க்கால்களும் அதிலே சேர்க்கப்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளன என்பதுதான் அதில் இருக்கிற மூல கேள்வி. ஆகவே தடப்பள்ளி, அரக்கன்கோட்டையோடு அதையும் சேர்த்து அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தடப்பள்ளி கால்வாயிலிருந்து பிரிந்து போகிற கால்வாய் கூவலூர் கால்வாய், அதிலிருந்து மாவாக் கால்வாய் போகிறது. அதிலே கிளைக் கால்வாய்கள் தான். அவைகளில் வருடத்திற்கு 10 மாதம் பாசனத்திற்கு தண்ணீர் விடப்படுகிறது. 10 மாதம் தண்ணீர் போனால் 2 போகம் தானாக விளையும். 3 போகம் கொஞ்சம் கூட சேர்த்து விளையும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் வாக்கியப்படி முப்போகம் விளையும். முப்போகம் விளையும் வகையில் ஒரு கால்வாயில் தண்ணீர் போனால் அது நிரந்தர பாசனத்திற்கு தண்ணீர் விட்டது ஆகாதா?

பவானி ஆற்றிலிருந்து பாசனத்திற்கு நீர்

3388 திரு. ஜி.ஜி. குருமூர்த்தி ;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பவானி ஆற்றிலிருந்து பாசனத்திற்கு நீர் எடுத்துக்கொள்ளும் வகையில் மின் இணைப்புக்கு அரசு அனுமதி அளித்து உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

பவானி ஆற்றிலிருந்து பாசனத்திற்கு நீர் எடுப்பதற்கு முறையான அனுமதி பெற்றுள்ள மனுதாரர்களுக்கு மட்டுமே மின் இணைப்புகள் வழங்கப்படுகின்றன. 1962-க்கு பிறகு நிறுவப்பட்ட விசைக்குழாய் அமைப்புகள் (Pump set) அல்லது புதிதாக அனுமதி கோரும் அமைப்புகள் ஆகியவற்றிற்கு அனுமதி தர இயலாது.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் இணைப்புக் கொடுப்பதற்கு உத்தரவிட்டு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே பிரையாரட்டி பிரகாரம் தான் இவர்களுக்கு கொடுக்கப்படும் என்று சொல்லப்

படுகிறது. நீண்டகாலமாக இவர்கள் தண்ணீர் எடுத்துக் கொண்டு இருப்பதால் இவர்களுக்கு அந்த பிரையாரட்டி இல்லாமல் இப்போதே கொடுப்பதற்கு உண்டான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு கொடுக்கிற யோசனையே அரசிடம் இல்லை. அந்த யோசனை வந்தால் உறுப்பினர் கருத்து கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நாட்களாகவே அரசாங்கத்தினுடைய அனுமதி பெற்றுத்தான் பவானி ஆற்றிலேயிருந்து ஏற்றங்கள் மூலமாக ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்று பாசனம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதைப்பற்றிய அனுமதியைப் பற்றித்தான் நான் இங்கே கேட்டேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் இணைப்பு கொடுக்கிற நிலைமை வந்தால், அப்போது உறுப்பினர் கருத்தும் ஆராயப்படும் என்றுதான் சொல்கிறேன்.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

துணை மின்நிலையம் கட்டுதல்.

*5224 **திரு. ப. முத்துசாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேடசந்தூர் தொகுதி, வள்ளிபட்டியில் துணை மின் நிலையம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இவ்வாண்டு எடுத்துக்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) வள்ளிப்பட்டியில், துணை மின் நிலையத்தை நிறுவுவதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.